

தென்மேற்கு பருவமழை தொடர்பாக கோவை மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட செல்வசிந்தாமணி குளத்தில் மதகுகள் வழியே உபரி நீர் வெளியேற்றப்படுவதையும் மற்றும் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு வருவதை வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் இரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர் த.குமரேசன், தலைமைப் பொறியாளர் விஜயகுமார், வருவாய் கோட்டாட்சியர் ராம்குமார், பொது சுகாதாரக்குழுத்தலைவர் பெ.மாரிசெல்வன், உதவி ஆணையர் செந்தில்குமரன், உதவி செயற்பொறியாளர் ஹேமலதா உள்பட பலர் உள்ளனர்.

மேயர் ஆர்.பிரியா தலைமையில்

## பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டம்!

நாளை நடைபெறுகிறது!

சென்னை, மே 27-

சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் நாளை (28.5.2025 -புதன்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறும்.

வருகின்ற 29.05.2025 அன்று நடைபெறுவதாக இருந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களால், ஒரு நாள் முன்னதாக 28.05.2025 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு, மேயர் ஆர். பிரியா தலைமையில் மாநகராட்சி மன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது.

ஜே.ஜே.எபினேசர் தலைமை! இரா.லட்சுமணன் – ச.தமிழ்செல்வன் முன்னிலை! இர.பொன்இளவரசன் வரவேற்புரை!

## ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ்.அரிஷ்குமார் திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர் கோவி.செழியன் – ஆர்.டி.சேகர் – எஸ்.ஜோயல் – கலாநிதி வீராசாமி – ஐட்ரீம் இரா.மூர்த்தி – வாழ்த்துரை!

சென்னை,மே-27

சென்னை வடக்கு மாவட்டம், தண்டையார் பேட்டை ஜி.சேகர், சிவகாமி, ஆகியோரின் மகனும் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளருமான எஸ்.அரிஷ்குமாருக்கும்,மதுராந்தகம் கே.வேலு, சாந்தி ஆகியோ ரின் மகள் வி.சரண்யாக்கும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (27.05.2025 -செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் மற்றும் திருமணவிழா (28.05.2025 - புதன்கிழமை) காலை 6.00 மணிக்குமேல் ஸ்ரீ பேலஸ் ஏ.சி, எஸ்.என். செட்டிதெரு, இராயபுரத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,தலைமை வகிக்கிறார். ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், வட்டச் செயலாளர் ச.தமிழ்செல்வன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இர. பொன்இளவரசன் வரவேற்கிறார்.



உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், ஆகியோர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, கே.வி. லோகேஷ், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.செந்தில் குமார், என்.மருதுகணேஷ், ஆர்.வெற்றிவீரன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஏ.டி. மணி, இ.ரவிக்குமார், லயோலா கே.மதன், வை. கௌதமன், கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வெ.சு.சத்தியநாரா யணன், ஏ.ரமேஷ் பாபு, எஸ்.எம்.பரசுராமன், வி.வி.ரமேஷ், சி.மணிகண்டன், எம்.விமலா, டாக்டர் வை.கலைவாணன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், மாஸ். டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், தேவிகதிரேசன் எம்.சி, மணிமேகலை ஏழுமலை எம்.சி, குமாரிநாகராஜ் எம்.சி, பவித்ராநரேஷ்குமார் எம்.சி,

என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், எஸ். எல்.சுந்தர், கே.தேவன், ஆர். எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், எம்.எம். சாமி, பி.கே.மூர்த்தி, வி. முத்து, பி.அன்பழகன், எம். ரூபசங்கர், ஜெ.சுரேஷ்பாபு, ஆர்.ரமேஷ், கே.மோகன், டி.ஆர்.தணிகாசலம், சா. திருப்பதிசாமி, எஸ்.சொக்கலிங்கம், ஜி.ராஜா, டி.சங்கர், மீஞ்சூர் முகுந்தன், கெ. ஜானகிராமன், எஸ்.ஜான் கென்னடி, ஜெ.கௌஸ் பாஷா, எஸ்.பிரேம்குமார், பா.ஆ.சண்முகம், எஸ்.கே. இளங்கோ, கே.விஜயகுமாரி, கோ.ஹரிராமன், எஸ்.மதியழகன், பா.கோதண்டன், ஜே.ஜே.நெல்சன், வி.அன்பரசு, டி.லெலின், ஆர்.ராஜா, ஜெய் (எ) ராமு, இரா.மகேந்திரன், ஆ.பாபு, பி.தமிழ்செல்வன், வி.அருள், வசந்த், க. சரத்குமார், எஸ்.வி.சிவா, க.விக்னேஷ்வரன், ஜி.மணிகண்டன், மோ. ராபர்ட், மோ.சிவா, ஜி.தினேஷ் குமார், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எஸ்.குமரன் நன்றி கூறுகிறார்.

அண்ணா கிராமம் ஒன்றியம் -

## மு.இராமமூர்த்தி இல்லத் திருமண விழா!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – சி.வி.கணேசன் பங்கேற்பு!

கடலூர், மே.27-

கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம் என திரிமங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மு.இராமமூர்த்தி கௌரி ஆகியோரின் மகன் இரா. தமிழரசன் கு.பிரபாவதி ஆகியோரின் திருமணம் நாளை (28.05.2025 புதன்கிழமை) காலை 6:மணி முதல் 7:30 மணிக்குள் கடலூர் மெயின் ரோடு பண்ருட்டியில் உள்ள சிவ பார்வதி மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே. வெங்கட்ராமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் முன்னாள் ஒன்றிய செயலாளர் அண்ணா கிராமம் முரசொலி முகவர் என்.பலராமன் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமணத்தில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எம்.கே. விஷ்ணுபிரசாத், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் மாவட்ட அவை தலைவர் டாக்டர். கொ. நந்தகோபாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செ. புஷ்பராஜ், வி.சி.சண்முகம் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் கே. இராஜேந்திரன் மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.எஸ். எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார், நகர



மன்ற துணைத் தலைவர் ஏ.சிவா,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ. மதனகுரு, ஜி.கே. கதிர்காமல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.துரைராஜ் ஆ.சதாம், வி. திருவேங்கடம், பி.மணிவண்ணன், ஜெயந்தி ராதாகிருஷ்ணன், ஆர். சுந்தரவடி வேல் வி. ஜெயமூர்த்தி, எஸ்.சடாச்சரம், டி. கலியமூர்த்தி, மற்றும் பா.வை. எழில்செல்வம், ஏ.கலில்லு ரகுமான், டி. ஜெயமூர்த்தி, டி. வாசுகி, ஜெ. செந்தில்குமார், எஸ். சதாசிவம்,

எம்.முரளி முத்துசாமி, வி. சிவநேசன், ம.த. ஏசுதாஸ்,டி. நாராயணன், பி. எம்.முத்துசங்கர், எஸ். வி.ராமர் எம். ஆறுமுகம், உமையாள் ஆறுமுகம், ஸ்ரீதர், ராமச்சந்திரன், ராஜசேகர், புருஷோத்தமன், பூபதி, பாண்டியன், சக்கரபாணி, ராகவன், ஞானவேல், மணிகண்டன், ராஜசேகர், ரமேஷ், லட்சுமிகாந்தன், டி.எஸ். பாலகிருஷ்ணன், ரஞ்சித், சுபாஷ், தினகரன், அலெக்ஸ், பார்வதம் வெங்கட்ராமன், குமரகுரு, அங்கயற்கன்னி முருகன், ராஜாராமன், தியாகராஜன், சதாசிவம், குமுதவல்லி தண்டபாணி, கோவிந்தராஜ், சுந்தரராமன், வேணுகோபால், கோபாலகிருஷ்ணன், மகாலட்சுமி வெங்கடேசன், ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சி.தங்கராசு, எம். மணிவேல் (எ) வெங்கடேசன், இரா.அன்பரசன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோவை மணியன்

மே 27 (2009)



கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ‘கலைஞர் விருது’ வழங்கிசிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளர்(மகளிர்), பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டக் கழகத் தேர்தலில், மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கோ. பத்மநாபன் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும்; திருப்பத்தூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எம். ஷபீர் அஹமத் அவர்கள் ஆம்பூர் கிழக்கு நகர பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், திருப்பத்தூர் மாவட்ட மறுசீரமைப்பின்போது, மாவட்ட துணைச்செயலாளராக (மகளிர்) தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி சாந்தி சீனிவாசன் அவர்கள், வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் குடியிருந்து வருவதால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதால், நிரப்பப்பட வேண்டியிருப்பதால் மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, மே 26 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் தென்காசி வடக்கு மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு கோ.சுப்பையா மற்றும் திருப்பத்தூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு பி.ஏஜாஸ்அஹமத், மாவட்ட துணைச்செயலாளர் (மகளிர்) பொறுப்புக்கு ஜே.சர்மிளா ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**தென்காசி வடக்கு மாவட்ட அவைத்தலைவராக**

**திரு. கோ.சுப்பையா,** 23/1, லட்சுமியாபுரம் 7வது தெரு, சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்-627 756 அவர்களும்;

**திருப்பத்தூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக**

திரு. **பி.ஏஜாஸ் அஹமத்**, 4/4, வாத்திமனை மெயின் ரோடு, ஆம்பூர்-635 802 அவர்களும்;

**திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளராக (மகளிர்)**

**திருமதி. ஜே. சர்மிளா**, சின்னசேரி கிராமம், அகரம்சேரி அஞ்சல், மாதனூர் (வழி), குடியாத்தம் வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தென்காசி வடக்கு மாவட்டம்

## புளியங்குடி மேற்கு, புளியங்குடி கிழக்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் மற்றும் நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் -தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த “தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு” ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள புளியங்குடி நகரம், **புளியங்குடி மேற்கு, புளியங்குடி கிழக்கு** என இரண்டு நகரங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரக் கழகங்களுக்கு பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றனர்.

**புளியங்குடி மேற்கு, புளியங்குடி கிழக்கு** நகரங்கள் பின்வரும் வார்டுகளை கொண்டதாக அமையும்.

**புளியங்குடி மேற்கு நகரம்** : 1, 2,9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 24, 25, 26, 27 28 ஆகிய 16 வார்டுகள்.

**புளியங்குடி கிழக்கு நகரம் :** 3, 4, 5, 6, 7, 8, 18, 19, 20, 21, 22, 23, 29, 30, 31, 32, 33 ஆகிய 17 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **புளியங்குடி மேற்கு, புளியங்குடி கிழக்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புளியங்குடி மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : நாகூர் ஹனி, புளியங்குடி, தென்காசி மாவட்டம்.

**புளியங்குடி கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : அந்தோணிசாமி, புளியங்குடி, தென்காசி மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## புதுச்சேரி மாநிலம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு !

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் புதுச்சேரி மாநிலக் கழகத் தேர்தலில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.சோமு (எ) சோமசுந்தரம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, **மே 26 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”** என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுச்சேரி மாநிலம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஜெ.வேலன் (எ) கோவிந்தன் பேசின் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**புதுச்சேரி மாநிலம், பொதுக்குழு உறுப்பினராக,**

**திரு. ஜெ. வேலன் (எ) கோவிந்தன் பேசின்,** 2, காளியம்மன் கோயில் வீதி, தேங்காய்திட்டு, புதுச்சேரி-605 004. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.